**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி.**

**முன்னிலை:- திருமதி R.D. குருலட்சுமி,** M.A.,M.L., PGDI & CL.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருத்தணி.

திருவள்ளுவர் ஆண்டு 2055 விசுவாவசு வருடம் ஆனித் திங்கள் 30-ம் நாள்
2025 ம் ஆண்டு ஜுலைத் திங்கள் 14 ஆம் நாள் திங்கட்கிழமை

இடைநிலை மனு எண்.2/2025

இன்

இடைநிலை மனு எண்.3/2022

இன்

அசல் வழக்கு எண்.1/2020

(CNR.No.TNTR21-000002-2020)

...

1. கொல்லாபுரி (இறந்துவிட்டார்)
2. லாரன்ஸ்
3. பீயூலா
4. வர்கீஸ்
5. பிரியா ... மனுதாரர்கள்/மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. ரத்தினம்
2. தனலட்சமி ... எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 25.06.2025 ம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் G. கமலக்கண்ணன், V. பார்த்தசாரதி ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர் B. கிருஷ்ணகுமார் அவர்கள் முன்னிலையாகியும், உரிய வாய்ப்பு அளித்தும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதுரைக்கு தயாராக இல்லாததால் எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதுரை முடிக்கப்பட்டும், வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை நிலுவையில் இருந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

திருத்தணி நகர நிலஅளவையரை நீதிமன்றத்தில் ஆவணங்களுடன் ஆஜராகி சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்ப அனுமதி கோரி மனுதாரரால் உரிமையியல் நடைமுறை விதி 75-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:-**

வழக்கு சொத்தை வட்ட சார்அளளையருடன் நீதிமன்ற ஆணையர்

R D GURULAKSHMI

Digitally signed by R D GURULAKSHMI
Date: 2025.07.14 13:45:16 +0530

அளவீடு செய்ய மனு தாக்கல் செய்து, வழக்கு சொத்தை பார்வையிட்டு நில அளவையர் அறிக்கையுடன், நீதிமன்ற ஆணையர் அறிக்கையும் வரைபடமும் தாக்கல் செய்திருந்தார். 14.11.2024 ல் மனுதாரர் தரப்பு ஆட்சேபணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அரசு ஊழியர் எந்த காலத்திலும் பணியிடை மாற்றம் செய்ய வாய்ப்பு உள்ளது. எனவே திருத்தணி நகர நில அளவையரது அறிக்கை குறித்து விசாரணை செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. தவறும்பட்சத்தில் அவரது சாட்சியம் கிடைப்பது அரிதாகிவிடும். அவர் விசாரணைக்கு வந்தால்தான் உண்மை தெரிய வரும். இ.ம.எண்.2/2020 ல் நில அளவையர் தாக்கல் செய்த அறிக்கை குறித்து வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியம் அளிக்க திருத்தணி வட்ட சார்அளவையர் திரு. இராவணன் அவருக்கு உத்தரவிட வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மறுப்புரையின் சுருக்கம்:–</u>**

(அ) மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவானது பிரமாண வாக்குமூலம் இல்லாமல் நகல் அளிக்கப்பட்டுள்ளது. மனு பத்தி 6 ல் உள்ளவை கற்பனையானது. அரசு ஊழியர் பணியிடை மாற்றம் செய்யப்படலாம் என்பதால் அவரை அழைப்பாணை அனுப்பி விசாரிக்க வேண்டியது அவசியம் என்பது பொய்யானது. உரிமையியல் நடைமுறை விதிகள் 75(3)ல் வட்டாட்சியரை அணுகி ஆவணங்களின் உரிய நகல் வேண்டி மனு தாக்கல் செய்த பின்பே அந்த சாட்சியை அழைத்து விசாரணை செய்ய முடியும் என தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறு என்ன மனு, எப்போது கொடுக்கப்பட்டது என்பது இந்த மனுவில் இல்லை. எனவே இந்த மனு மணிகண்டன் எதிர் முத்துமாணிக்கம் என்ற சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி தள்ளுபடி செய்யத்தக்கதாக உள்ளது.

(ஆ) உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 16 விதி 1ல் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்புவது பற்றி கூறுகிறது. இம்மனுவின் இந்த சூழ்நிலைகளில் அது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. அது வழக்கில் எழுவினாவிற்கு பின்பே அழைப்பாணை அனுப்ப இயலும். இவ்வழக்கில் எழுவினா வனையப்படவில்லை. எழுவினா வனையப்படும் முன்பே நிலஅளவையரை விசாரிக்க இயலாது. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

(இ) உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 11ன் கீழ் மனுவில் விசாரணை நிலுவையில் இருக்கும்போது எதிர்வழக்குரை தாக்கல் செய்ய கோருவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. ஏற்கனவே கணேச ரெட்டி

R D GURULAKSHMI Digitally signed by R D GURULAKSHMI Date: 2025.07.14 13:45:25 +0530

என்பவர் அசல் வழக்கு எண்.96/2008 ஐ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து பணவரைவு அதிகார வரம்பிற்காக திருத்தம் செய்யப்பட்டு, அது சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு 2024 ல் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. மேற்படி வழக்கை நடத்த யாரும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

(ஈ) கொல்லாபுரி என்பவர் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். அவர் பின்னிட்டு இறந்து விட்டார். அவரது வாரிசுகளை சேர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால் பழநி என்பவரது வாரிசுகள் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளனர். நில அளவையர் தனது அறிக்கையில் பிரதிவாதிகள் வெகுகாலத்திற்கு முன்பே வீடு கட்டி அனுபவத்து வருவதாக சொல்லியுள்ளார். விளம்புகை பரிகாரம் கோராத வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல. இந்த மனு தேவையற்றது. இம்மனு அனுமதிக்கப்பட்டால் நீதியை தவறாக வழி நடத்துவதாக ஆகும். எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

3. <u>**தீர்வுக்குரிய பிரச்சனை:-**</u>

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

4. <u>**தீர்வு:-**</u>

மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கில் இ.ம.எண்.3/2020 விசாரணைக்காக நிலுவையில் இருந்த நிலையில் மேற்படி மனுவில் திருத்தணி வட்ட நில அளவையரை சாட்சி விசாரணை செய்ய வேண்டும் என கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் நிலஅளவையர் பணியிடை மாற்றம் காரணமாக வேறுஇடத்திற்கு சென்று விட்டால் அவரை விசாரணை செய்வது இயலாததாகிவிடும் என்பதால் அவரது சாட்சியம் அவசியம் என்று கூறி வாதிடப்பட்டது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் உரிமையியல் நடைமுறை விதிகள் 75 ன் படியான நீதிமன்ற விதிகள் பின்பற்றப்படாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என வாதிடப்பட்டது.

5. உரிமையியல் நடைமுறை விதி 75(3)ல்

> "அசல் ஆவணத்தை ஒப்படைப்பது அவசியமானதென்று கருதினாலன்றி அல்லது சான்றிட்ட நகலுக்கு முறையாக விண்ணப்பித்திருந்தும் அது வழங்கப்படவில்லை என்பதில் மனநிறைவு அடைந்திருக்கும்போதன்றி, மற்றபடி நீதிமன்றம் அத்தகைய அழைப்பாணையை வழங்குதல் கூடாது. ஆவணத்தை நகல் எடுக்க தான் அவசியமெனக் கருதும் தொகையினை, விண்ணப்பதாரர் நீதிமன்றத்தில் செலுத்தும்படி நீதிமன்றம் கட்டையிட்டு அதனை ஒவ்வொரு வழக்கிலும் எழுத்துருவில் பதிவு செய்திடும்."

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2025.07.14 13:45:32 +0530

எனக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு இவ்வழக்கில் முறையாக நில அளவையரிடமோ அல்லது திருத்தணி வட்டாட்சியரிடமோ ஆவணங்கள் நகல் கோரி எந்த தேதியில் விண்ணப்பம் வழங்கப்பட்டது, அது எந்த தேதியில் நிராகரிக்கப்பட்டது அல்லது நகல் மனுவின் நிலை என்ன என்பது குறித்து எந்த விளக்கமும் மனுதாரர் தரப்பில் இல்லை. அசல் வழக்கில் எழுவினாக்களே வனையப்படாத நிலையில், இருதரப்பிலும் சாட்சி விசாரணை துவங்கப்படாத நிலையில் என்ன அடிப்படையில் மனுதாரர் நில அளவையரை விசாரணை செய்ய கோருகிறார் என்பதற்கு எந்த விளக்கமும் இல்லை. உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 18 பிரிவு 3A ல் சாட்சி விசாரணை பற்றிக் இதனடியில் கண்டவாறு கூறுகிறது.

> **"Code of Civil Procedure Order 18 Rule 3-A.** Party to appear before other witnesses. – Where a party himself wishes to appear as a witness, he shall so appear before any other witness on his behalf has been examined, unless the Court, for reasons to be recorded, permits him to appear as his own witness at a later stage."

6. இவ்வழக்கில் மனுதாரர் தன்னை சாட்சியாக விசாரணை செய்வதற்கு முன்பு மூன்றாம் தரப்பினரை சாட்சி விசாரணை செய்ய கருதும்பட்சத்தில் நீதிமன்றத்தில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 18 பிரிவு 3A ல் கூறியுள்ளவாறு நீதிமன்ற அனுமதிக்கான மனு எதுவும் தனியாக தாக்கல் செய்யவில்லை. எனவே மேலே கண்ட சூழ்நிலைகளில் மனுதாரர் அசல் வழக்கில் எழுவினாவே வனையப்படாத நிலையில் மனுதாரர் தரப்பில் மனுதாரர் சாட்சியம் அளிப்பதற்கு முன்பு மூன்றாம் நபரை விசாரிக்க உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 18 பிரிவு 3A ன் கீழ் அனுமதி பெறாமல் அசல் வழக்கு விசாரணையை இழுத்தடிக்க வேண்டி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

இறுதியாக இம்மனு எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 14 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2025.07.14 13:45:39 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.

<u>இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2025.07.14 13:45:46 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.